2024 பிப்ரவரி 14]

மில்லிலிருந்து வடசேரி சாலையில் கீழ்ப்பாலம் உள்ளது. மழைக் காலங்களில் கீழ்ப்பாலத்தில் தண்ணீர் நிரம்பி பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் செல்ல முடியாமல் உள்ளார்கள் என்பதை அரசு அறியும். கீழ்ப்பாலம் வழியாகப் பேருந்து செல்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதையும் அரசு உணர்கிறது. அதேநேரத்தில் கீழ்ப்பாலங்களை, மேம்பாலங்களாக அமைத்துத் தர, அதற்கு வேண்டிய திட்ட மதிப்பீடுகளை தயார் செய்கின்ற நிலையில் அரசு இருக்கின்றது. ஆனாலும்கூட, கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் கேட்ட, அன்னவாசல் ஒன்றியம், பொம்மாடி மலையிலிருந்து தொடையூர் செல்லும் சாலை, தாவூது மில்லிலிருந்து வடசேரி செல்லும் சாலை இந்த இரண்டும் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சாலையாக இருக்கிறது. ஏனென்றால், அது மாநில நெடுஞ்சாலையாக இல்லை. ஒன்று, மாவட்ட முக்கியச் சாலையாக இருக்க வேண்டும். அது ODR, MDR, SH-ல் இருக்க வேண்டும். இந்த மூன்றும்தான் மாநில அரசு நிருவாகத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற சாலைகள். அதில் இருந்தது என்றால், இதற்கு ஏற்பாடு செய்யலாம். ஏற்கெனவே, அது ஒன்றிய அளவில் இருக்கின்ற காரணத்தினால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதைப் பரிந்துரை செய்து, அந்தத் துறையின் சார்பாக ஒரு ஆணையைப் பிறப்பித்து, எங்கள் துறைக்கு வந்தால்தான், அதை நாம் முழுமையாக எடுத்துச் செய்ய முடியும். எனவே, சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகி, அங்கிருந்து அந்தச் சாலையை தேர்வு செய்து, உள்ளாட்சித் துறைக்கு அனுப்பினால்தான், அது எங்களுக்கு வர வாய்ப்பு இருக்கிறது. அதற்கு நீங்கள் முயற்சி எடுத்துக்கொண்டால், அரசின் சார்பாக நாங்கள் முயற்சி எடுப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

மணிமண்டபத்திற்கு பூங்கா

***75398—திரு. கா. அண்ணாதுரை:**

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை நகரத்தில் உள்ள அஞ்சாநெஞ்சன் அழகிரி மணிமண்டபத்திற்கு சுற்றுச் சுவர் கட்டவும், பூங்கா அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை நகரத்தில் உள்ள அஞ்சாநெஞ்சன் அழகிரி நினைவு மண்டபத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்கும் பணிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2022–2023 ஆம் நிதியாண்டில் சுமார் 11 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த மண்டப வளாகத்திலேயே சிறிய அளவிலான தோட்டம் அமைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. கா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தற்போது அங்கு கழிப்பிட வசதி இல்லை. எனவே, அங்கு கழிப்பிட வசதியையும், சிறுவர்கள் விளையாடுகிற வகையிலே, விளையாட்டு உபகரணங்களுடன்கூடிய பூங்காவும் ஏற்படுத்தித் தருவதற்கு அரசு முன்வருமா என தங்கள்மூலம் நான் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலுக்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நன்றியைத் தெரிவித்தார்கள். நானும் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொகுதி மேம்பாட்டு நிதியிலேயே பூங்கா அமைக்கும் பணியை அவர் மேற்கொண்டுவிட்டார். மேலும், கழிப்பிட வசதியைப்பற்றி அவர் கூறியிருக்கின்றார். எதிர்காலத்தில் நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.*

2024 பிப்ரவரி 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. கா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை அஞ்சாநெஞ்சன் அழகிரி அவர்கள், 1938–ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு நீண்ட நெடிய நடைபயணம் மேற்கொண்டு, உளுந்தூர்பேட்டைக்கு அவர் வருகிறபோது, அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து, செருப்பு தோரணம் அவருக்கு எதிராக கட்டப்பட்டது. அதே இடத்தில் பல மணி நேரம் நின்று, ஏன் இந்த இந்தி எதிர்ப்புக்கான பயணம் என்பதை எடுத்துச் சொல்லி, அவர்களிடத்தில் பேசி, எந்த மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்களோ அவர்களே அந்தத் தோரணத்தை அகற்றி அவரை வழி அனுப்பியது வரலாறு. எனவே, அப்படிப்பட்ட திராவிட இயக்கத்தினுடைய தளபதி வரலாறு மற்றும் திராவிட இயக்கத் தலைவர்கள் உள்ளடக்கிய அவர் ஆற்றிய உரைகள், நூல்கள் போன்றவற்றைக் கொண்ட ஒரு நூலகம் அங்கு அமைக்கப்படுமா என தங்கள்மூலம் நான் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்சாநெஞ்சன் அழகிரியைப்பற்றி உலகத்தில் அனைவரும் அறிவார்கள். அந்தவகையில் அவருக்கு பல்வேறு பணிகள், நம்முடைய மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*